# சுட்டி

25 காசு

மாத இதழ் 6 [15-7-81]





FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

## யானை, பஸ் ஏறியதில் என்ன தப்பு?

பஸ் கட்டண உயர்வு வந்தாலும் வந்தது எல்லோரும் பஸ் கட்டணம் யானை விலையாகி விட்டது என்று சொல்கிறார்கள். இதைக் கேட்ட யானை இந்த விலையானால் நாமும் பஸ்ஸில் ஏறிப் பயணம் செய்யலாம் போலிருக்கிறது என்று எண்ணி, குளு குளு விரைவு வண்டியில் ஏறப்பார்க்கிறது!

அதற்குரிய பஸ் கட்டணம் தானே!




FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

... வயது இதழ் இது. முதல இதழில் அளித்த சுய அறிமுகத்தை இப்போது மீண்டும் நினைவூட்டுகிறோம். பரிசோதனை முயற்சியாகத் தனிச்சுற்றுக்கு 950 பிரதிகள் மட்டுமே அச்சடிக்கப்பட்ட முதல் இதழிலிருந்து ஆறே மாதத்தில் சுட்டியின் இவ்விதழ் 12,000 பிரதிகளாக உயர்ந்துள்ளது. சுமார் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாசகர்களை எட்டியுள்ளது.

சிறு பத்திரிகைகள் வரலாற்றில் இது ஒரு சாதனை என்று பெருமை கொள்வதில் நமது விழிப்பான வாசகர்களுக்கே அதிக பங்குண்டு.

தமிழக வாசகர்கள் முற்போக்கான விஷயங்களுக்கு ஆதரவு தருகிறார்கள் என்பதில் இனியும் யாருக்கும் குழப்பம் வேண்டாம். மக்கள் அசிங்கத்தைத்தான் விரும்புகிறார்கள் என்ற பொய்க்கு இனி முடிவு கட்டுவோம்.

வண்ண விளம்பரமின்றி, முழுநேர அலுவலர்கள் இன்றி, பெரிய முதலீடு இன்றி, கட்சி பெரிய மனித செல்வாக்கின்றி, மசாலா பத்திரிகைகளுக்குரிய எந்த அடிப்படை வசதிகளும் இன்றி, நல்ல வாசகர்களை மட்டுமே 'நம்பி' இன்றைய பிரச்சனையையும் தேவையையும் எழுத வேண்டியதையும் தந்ததில் நாங்கள் ஏமாற்றப்படவில்லை!

சுட்டி பிரச்சனைகளைச் சுட்டிக் காட்டுவதோடு நின்று விடாது. அடுத்து பிரச்சனைக்களுக்கான தீர்வையும் எழுத்துலகிற்கு வெளியே வந்தும் நடைமுறைப் படுத்த விரும்புகிறோம். நுகர்வோரை ஒன்றிணைத்து ஓரணியில் குரல் கொடுக்க அணிவகுக்கும் முதல் கட்டமாக, சென்ற இதழில் வாடகை வீட்டில் குடியிருப்போர்க்கு இலவச் சட்ட ஆலோசனை தருவதாக அறிவித்திருந்தோம். பலரும் பலனடைந்தார்கள்.

இத்திட்டம் சென்ற இதழோடு முடிவடையாது தொடர்ந்து செயல்படும். வாடகைவீடுகளில் பிரச்சனைகளோடு வாழ்பவர்கள் தொடர்ந்து இலவச சட்ட ஆலோசனை பெறலாம், என்பதையும் அறிவித்துக் கொள்கிறோம்.

பிற உங்களிடமிருந்து.

அன்புடன்,
**ஆசிரியர் குழு**





☐ காமிக்ஸ் போல நினைத்து தங்களின் சுட்டியை வாங்கினேன். ஆனால் அதில் அரசியல் முதல் அனைத்து விஷயங்களும் இருப்பதைக் கண்டேன். இப்படியொரு புத்தகம் மாத இதழாக இருப்பதை எண்ணிப் பெருமைப் படுகிறேன்.

**கே. செந்தமிழ்ச்செல்வன்,**
**64, ஸ்ரீ அய்யப்பா நகர், சென்னை-111.**

☐ அசுர வேகத்தில் ரோட்டரியில் 'விஷத்தை' கக்குகின்ற பத்திரிகைகள் நடுவில் 'விஷயத்தை' கக்குகின்ற சுட்டியின் பணி தொடர இதயம் நிறைந்த இனிய வாழ்த்துக்கள்.

**A. இளமுருகு,** நிருபர், ''மாலை முரசு'', ''தினகரன்'', ஈரோடு-1.

☐ மக்களின் நலனைக் கவனியாது கமிஷன்கள் பல நியமித்து பணத்தை விரயமாக்கும் மத்திய அரசுக்கு அட்டைப்பட கார்ட்டூன் சரியான சவுக்கடி.

**சு. குருமூர்த்தி, சென்னை-61.**

☐ சுவிசா சிசுபாரனின் 'ஆசிய விளையாட்டுப் போட்டி' கட்டுரை நல்லதொரு கருத்தைச் சொல்லியிருக்கிறது. மக்களுக்கும் அரசுக்கும் இது புரிந்தால் தானே!.

**R. ராமனுதன், புவனேஸ்வர்.**

☐ ஆமாம், உங்களுக்கு எங்கிருந்துதான் நியூஸ் கிடைக்கின்றன? 25 காசுக்கு இவ்வளவு நியூஸ்! நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரச்சனையையும் சுட்டி காட்டியிருப்பது நன்றாயிருக்கிறது.

**பா. அண்ணாத்துரை,**
**அரசு கலைக்கல்லூரி, விழுப்புரம்-605 602.**

FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

# இவரா கல்வி அமைச்சர்!

அண்மையில் நமது மத்திய கல்வியமைச்சர் **S. B.** சவான் தென்னகத்திற்கு வருகை தந்தார். பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அதற்கேற்ப கருத்துக்களை உதிர்த்துச் சென்றிருக்கிறார் இவர்.

ஆசிய விளையாட்டுப் போட்டி நிர்வாகிகளுக்கு உதவியாளர்களாகவும், வரவேற்பாளர்களாவும் இருக்க நாடு முழுவதிலுமிருந்து மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும்படி மாநில கல்வியமைச்சர்களுக்கு இவர் கடிதம் எழுதியிருக்கிறார். இந்த ஸ்டண்ட் எதற்கு?

வேலையின்றி நாடு முழுவதும் நிரம்பி வழியும் பட்டதாரிகளின் நிலைமை இவருக்குத் தெரியவில்லையா? கோடிக்கணக்கில் விளையாட்டில் பணத்தை இறைக்கும் போது தற்காலிகமாகவாவது இவர்களுக்கு முதலில் வேலை வாய்ப்பு அமைக்கக் கூடாதா? எல்லாவற்றிலுமே சுற்றிவளைப்பது நடுவில் ஊழலுக்கு இடம் விடத்தானே?

பள்ளிகள், கல்லூரிகளில் நன்கொடை வசூலிக்கப்படுவதைத் தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்க முன்வந்தால் தக்க நடவடிக்கை எடுப்பதாக மாநில கல்வியமைச்சர் கூறுகிறார். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நன்கொடை வசூலிப்பதற்கு தாம் ஆதரவு காட்டுவதாக மத்திய அமைச்சர் தெரிவிக்கிறார். இரண்டிற்கும் அதிக வித்தியாசமில்லை.

இந்த நன்கொடை கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கான வசதிகளை அதிகரிக்க வசூலிக்கப்படுவதால் இதற்கு ஆதரவு காட்டுகிறாராம் திரு. சவான். மாணவர் நல நிதி என்று கல்வி நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொருவரிடமும் கண்டிப்பாக வசூலிக்கின்றன. அது எதற்கு? கல்லூரிகளும், பள்ளிகளும் பச்சை வியாபார நிறுவனங்களாக புது புது உத்திகளில் காசு சம்பாதித்து வருவது இன்று யாருக்குத்தான் தெரியாது. இங்கு ஞானபீடங்களாகவா கல்வி நிறுவனங்கள் அவதாரம் எடுத்திருக்கின்றன? திக் விஜயம் செய்யும் மந்திரி யாருடைய பிரதிநிதியாக வந்திருக்கிறாரோ?

அநேக ஆசிரியர்கள் கல்வி நிறுவனங்களுக்குள்ளேயே தமது அரசியல் ஈடுபாடுகளை வெளிப்படுத்துவதைக் கேட்டு இவர் ஆச்சரியப்படுகிறாராம். சென்னையில் நகர பள்ளித்தலைமையாசிரியர்கள் மாநாட்டில் பேசும்போது இப்படி மூக்கில் விரலை வைத்திருக்கிறார்.

திருவெற்றியூரில் வேளான் செட்டி மேல்நிலைப் பள்ளியில் அட்மிஷன் பொறுப்பேற்றிருந்த ஆசிரியர் தாக்கப்பட்டிருக்கிறார். இதற்குக் காரணம் வேறு யாருமல்ல. கல்வி நிறுவனத்திற்குள் அரசியல் செல்வாக்கை அநியாயமாக அவிழ்த்து விட்ட அரசியல் வாதியேதான்.

பச்சோந்தித்தனத்துடன் பிரச்சனையைப் பற்றிய தெளிவின்மையுமே மந்திரிப்பதவிக்கு இலக்கணமோ? நமது மந்திரிகளை மக்கள் இனம் கண்டு கொள்ள இது ஒரு சிறந்த வாய்ப்பு!

—நிலா



# நிபுணர்களைக் குழப்பும் சிறுமிகள்



*வெர்ஜீனியா கென்னடியும், கிரேசி கென்னடியும் இரட்டையர்கள். கலிபோர்னியாவிலுள்ள சாண்டியாகோவைச் சேர்ந்தவர்கள். தமது இரண்டரை வயதுமுதல் இவர்கள் தமக்கிடையே ஒரு நூதன மொழியில் சரளமாகப் பேசிக்கொள்கின்றனர். இம்மொழி எந்த நாட்டை, எந்த இன மக்களைச் சேர்ந்தது என்பதும் புதிராகவே உள்ளது.*

*இவர்களது உரையாடல் ஏனையோருக்கு உளறலாகவே தோன்றுகிறது. ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் இச்சிறுமிகளிடம் டாக்டர்கள் கூட குறையேதும் காண இயலவில்லை.*

*ஒவ்வொரு பொருளுக்கும் ஆங்கிலத்தில் பெயர் குறிப்பிடும் இச்சிறுமிகள் தங்களுக்கிடையே பேசும்போது மட்டும் வேறொரு மொழியில் பெயர் குறிப்பிடுவது ஆச்சரியப்படத்தக்க விஷயமாகும். ஆங்கில வார்த்தைகளை அப்படியே இந்நூதன மொழியில் மொழி பெயர்க்கும்படி கேட்டால் இவர்கள் மௌனமாகி விடுகின்றனர். மொழி பெயர்க்கும் திறனிருந்தும் இவர்கள் மௌனம் சாதிப்பது மொழியியல் வல்லுனர்களை மேலும் குழப்புகின்றது.*

*இவர்களது உரையாடல்களை வீடியோ டேப்புகளில் பதிவு செய்து அதனை மொழியியல் வல்லுனர்கள் ஆராய்ந்து வருகின்றனர். வீடியோ டேப்புகளில் பதிவாகியுள்ள "டுகுன், யோம், டிங்கின், சாஷே, டைடி பான்னு தூஷா" ஆகிய வார்த்தைகளுக்கு முதலில் அர்த்தம் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இதுவரை அர்த்தங்கள் பிடிபடவில்லை.*

—அக்கினி



FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

# மீனாட்சிபுரம் ரஹ்மத் நகர்

மதம் மாறிய அரிசனங்களின் சூழ்நிலையையும், மனநிலையையும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தெளிவாக்கியுள்ளது. மதமாற்றத்திற்குக் காரணம் பணமோ, பலவந்தமோ அல்ல. ஆனால் இந்து மதத்தில் உள்ள மேல்ஜாதியினர் இவர்களை நடத்தும் மோசமான முறைகளும், செய்யும் கொடுமைகளும் தான் அவர்கள் மதம் மாறக்காரணம். மத்திய மாநில அரசுகள் அரிசனங்களுக்கு கணிசமான சலுகைகள் அளித்துள்ளன. மதம் மாறினால் அவற்றை இழந்தாக வேண்டும். அப்படி இருந்தும் மதம்மாறி இருக்கிறார்கள். எனவே பணத்திற்காக மதம்மாறி இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. பொருளாதாரத் தாழ்வைவிட சமூக தாழ்வுதான் கொடுமையானதாக உள்ளது. உயர் ஜாதியினர் வசிக்கும் பகுதிக்கு அரிசனங்கள் செருப்பணிந்தோ, மேலாடை உடுத்தியோ போகக்கூடாது. இதுபோன்ற அநீதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. மதம்மாறிய பின்னர் திருப்திப் பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள்.

துக்ளக் மற்றும் சில நாளேடுகளில் சில 'இந்துமதப் பெரியவர்கள்' சொன்னதாக கருத்து வெளியிடப்பட்டுள்ளது. "மதம் மாறுவது துரோகச் செயல்......வித்தியாசம் இருக்கின்றது என்பதற்காக, மதம் மாறுவதில் அர்த்தமே இல்லை" என்று ஒருவர் உபதேசம் பாடியுள்ளார், மற்றொருவர் அரபு நாடுகளின் பணம்தான் காரணம் என்று கரடி விட்டுள்ளார்'

கீழ்வெண்மணியில் 44 அரிசனங்கள் உயிரோடு கொளுத்தப்பட்ட போது இந்துமதப் 'பெரியவர்கள்' மௌனப் பண்டாரங்களாக இருந்தது ஏன், என்று இதுவரை தெரியாது!


இங்கு வந்த மத்திய அமைச்சர் மக்வானா நீலிக்கண்ணீரை கொட்டியுள்ளார். 'தமிழக அரசு எப்பொழுதும் அரிசனங்களின் உரிமையை மீட்டுத்தர நினைத்தது கூட இல்லை'. மற்ற மாநிலங்களில் மட்டும் என்ன வாழ்கிறதாம்? காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் அரிசனங்கள் காக்காய், குருவியைப்போல் மேல்சாதி மிராசுதாரர்களால் சுட்டுப் பொசுக்கப்பட்ட போது மக்வானாக்கள் எம்பிக் குதிக்கிறார்களா?

தீண்டாமையும், ஏழ்மையும் அரிசனங்களை காலம் காலமாக பிழிந்து வருகிறது. மதம் மாறுவது இதற்கெல்லாம் சரியான தீர்வாகப் போவதில்லை ஆனால் இந்த கொடுமையின் அடித்தளத்தை மறந்து சரடு விடும் இந்து மதப் பண்டாரங்களும், அரசியல் பூசாரிகளும் இதைப் பயன்படுத்திக் கொள்ளும், நவீன ஔரங்கசீப்புகளும், நல்ல நாடகம் நடத்துகிறார்கள்!

இவற்றைப் பார்க்கும் போது நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மானிடரை நினைத்து விட்டால்' என்ற பாரதியின் நெஞ்சைப் போல் நமது நெஞ்சமும் துடிக்கின்றது.

—மானுடன்






கருத்து : சுயராஜ்

FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

# எண்ணத்தின் படம்

எண்ணத்தைப் புகைப் படம் எடுக்க முடியுமா? முடியும் என்கிறார் டெட்சீரியோஸ் என்ற அமெரிக்கர். ஏதாவது ஒரு பொருளை தனது மனதில் ஆழமாக இருத்தி பின்னர் சீல் செய்யப்பட்ட காமிரா லென்ஸ் வழியாக உற்றுப்பார்த்து, பிலிமில் பதிய வைக்கிறார், சீரியோஸ். நீங்கள் மேலே பார்க்கும் படம் அவரது எண்ணத்தின் பிம்பம். கீழே உள்ளது அவர் நினைவில் கொண்ட பொருளின் புகைப்படம். இவரை மிகவும் கவனமாக ஆய்ந்த ஜூல் ஐசன்பட் என்ற உளவியலறிஞர் இது வெறும் கட்டுக்கதையல்ல என்கிறார். மனித எண்ணங்கள் ஜடத்தைப் (Matter) பாதிக்க முடியும் எனக் கருதப் படுகிறது.

—ரமேஷ்.





சுட்டியாரின் பார்வை படாத இடங்களில் குறைகள், தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இவற்றைச் சுட்டிக்கு அனுப்பினால் வெளியிடுவீர்களா?

**இரணியல் 'குமாரசுவாமி' தெர்மல் நகர், தூத்துக்குடி.**

*இருகரம் நீட்டி வரவேற்கிறோம். அளவு, தரம் சுட்டிக் கேற்ப இருப்பின் வெளியிடுவோம். சிறப்பாக கிராமப்புறங்களில் இன்னும் எங்கள் பார்வை பட விருப்புகிறோம்.*

நட்சத்திர பேட்டிக்கும் அரசியல் வாதியின் பேட்டிக்குமுள்ள வேறுபாடு என்ன?

**S. ரவீந்திரன், திருராமேஸ்வரம், கோட்டகச்சேரி.**

*பேட்டியில் நட்சத்திரம் தன்னைப் பெரும் அரசியல் வாதியாக நினைத்துப் பேசுவார். அரசியல் வாதியோ நிறைய நடிப்பார்.*

டி.வி. நிகழ்ச்சிகளைப் பற்றி தங்களுடைய பத்திரிகையில் எந்த விமர்சனமும் வராதது ஏன்?

**S. ராமகிருஷ்ணன், 33, செயிட் காலனி II தெரு, சென்னை-8.**

*கொஞ்சம் பொறுங்கள். டி.வி.யை உன்னிப்பாக கவனித்தே வருகிறோம். விரைவில் சுட்டி ஸ்கீரீனில் விமர்சனப் படம் வரும்.*

சமுதாய வளர்ச்சிக்கு இளைஞர்களின் பணி யாது?

**பா. அண்ணாதுரை, II B.Com,**
**அரசு கலைக்கல்லூரி, விழுப்புரம்.**

*பிரச்சனையை மட்டும் பார்க்காது, அதன் ஆணிவேரையும் பார்க்கும் பார்வை வந்துவிட்டால் இக்கேள்விக்குப் பதில் கிடைத்துவிடும்.*

பல எழுத்தாளர்கள் புனைப்பெயரில் எழுதுவதேன்?

**கே. எம். பாஸ்கரன், கே. வி. குப்பம்.**

*1. சொந்த பெயரில் அறிமுகமாக விரும்பாமை; 2. தேவையில்லாத அநாவசிய சிக்கல்களைத் தவிர்க்க; 3. பெற்றோர் வைத்த பெயரை விட, தனக்குப் பிடித்த பெயரை சூட்டிக்கொள்ளும் வாய்ப்பு.*

# சுட்டியாரின் பதில்கள்

FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

# நேர்மையான தேர்தல் அதிகாரி...

உத்திரபிரதேசத்தில் 5 நாடாளுமன்றத் தொகுதிக்கும் 8 சட்டமன்றத் தொகுதிக்கும் ஜூன் 14 இடைத் தேர்தல் நடந்தது. ஹார்வால் தொகுதியில் பகுகுணாவும், உ.பி. மாநில அமைச்சரும் (காங்கிரஸ்) போட்டியிட்டனர். இந்திரா அம்மையார் 5 நாட்கள் முகாமிட்டு பிரச்சார மத்தாப்புக்களைக் கொளுத்தித் தள்ளினார்.

ஜூன்-15 அன்று பகுகுணா தேர்தல் அதிகாரியிடம் தேர்தலில் மோசடிகள் நடந்துள்ளதாக புகார் செய்தார். இந்திய தலைமை தேர்தல் அதிகாரி தனது செயலாளர் தலைமையில் ஒரு குழுவை அனுப்பி நேரடி ஆய்வு செய்தார். ஆளுங் கட்சிக்காரர்கள் செய்த பச்சையான அரசு துஷ்பிரயோகம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

உ.பி. மாநிலத்தில் நிறைய போலீஸ் இருந்தும், தேர்தல் கமிஷனரிடம் ஒப்புதல் பெறாமலேயே பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம் ஆகிய இடங்களிலிருந்து போலீஸ் குவிக்கப்பட்டது. பற்றாக்குறைக்கு மத்திய போலீசும் வந்து வேலை செய்திருக்கிறது. ‘சில தொகுதியில் மட்டுமே நடந்த இடைத் தேர்தலுக்கு இவ்வளவு போலீஸ் பட்டாளமா!’ என்று தலைமை தேர்தல் அதிகாரி எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார். ஆளுங்கட்சி செல்வாக்கைக் கண்டும் அஞ்சாமல் மறு தேர்தல் செப்டம்பர் 30க்கு நடக்க உத்தரவிட்டுள்ளார்.

நெஞ்சில் உரத்தோடு நேர்மை திறத்தோடு தேர்தல் அதிகாரி முடிவு சொன்னதால் அவரது சீட்டைக் கிழிக்க முயல்வார்களா?

அரசியல் சட்டப்படி இதற்கு 2/3 பங்கு நாடாளுமன்ற உறுப்பினர் வாக்களிக்க வேண்டும். இவருக்குத் திறமை போதாமை என்றோ தவறான நடத்தை என்றோ நிரூபித்து தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதி தானே சபையில் இருந்து உத்தரவும் தரவேண்டும்.

இதையும் கூட செய்துவிட முயற்சி நடக்கலாம். அதிசயமில்லை! நம் ஜனநாயகக் கனவுகளைக் கலையாமல் வைப்பதிருப்பதில் இனியும் நம்பிக்கையில்லை!

—சாமான்யன்

☐ கத்தரிக்காய் ஒரு மூலிகை என்பது பலருக்குத் தெரியாது. எனவே தான் சித்தர்கள் மரியாதையுடன் ‘பத்தியக் கறி’ என்று இதனை அழைக்கிறார்கள். இலக்கியத்தில் அழைக்கப்படும் வழுதுணங்காயும் இதுவே.

☐ ஆஸ்துமா, ஈரல்நோய், காசம் போன்ற தீவிரமான நோய்களுக்கு இலக்கானவர்கட்கு வலிமை தரக்கூடியது இது.

☐ இதனை வற்றல் போல் செய்து நல்லெண்ணெயில் பொறித்து உண்டால் உடலுக்குத் தேவையான உஷ்ணசக்தி (Calories) கிடைக்கும்.

☐ தாது பலவீனமாகி, இல்வாழ்வில் உடல்சோர்வு உற்றவர்களுக்குக் கத்தரிக்காய் புத்துணர்ச்சியும், தாது விருத்தியும் உண்டாக்கும்.

☐ இதனை வற்றல், குழம்பு செய்து உண்டால், கிருமிகளின் தாக்குதலால் வலப்பக்க ஈரல் வலிமை குன்றி - இருந்தால், ஈரல் சோர்வைப் போக்கும்.

☐ கத்தரிப்பழத்தை ஊசியினால் குத்தி நல்லெண்ணெயில் வதக்கி மிளகுத்தூள், உப்பு தூவி உண்டால் பல்நோய்கள், அஜீரணம் நீங்கும். வாய்வுக் கோளாறு குறையும். பித்தம் போகும்.

☐ மனிதர்க்கு மட்டுமன்றி, மாடுகளுக்கு வரும் வயிற்று வலி, வயிற்றுப் புழுக்கள், வயிறு உப்புசம் ஆகியவற்றுக்குக் கத்தரிக்காயைத் தணலில் சுட்டு சிறிது பெருங்காயம் கூட்டி மாடுகளுக்குப்புகட்ட, அந்நோய்கள் விலகும்.

☐ தோல் சம்பந்தப்பட்ட நோய் உடையவர்கள் மட்டும் கத்தரிக்காயைச் சேர்க்கக் கூடாது; சர்மநோய்க் காரணங்களை இது அபிவிருத்தி செய்யும்.

☐ ‘மூர்த்தி சிறியதாயினும், கீர்த்தி பெரியது’ என்னும் பழமொழிக்குச் சரியான எடுத்துக்காட்டு கத்தரிக்காய்.

—மூலிகைமணி







FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

# "சுட்டி"

## வளமோடு
## வாழ
## வாழ்த்துகிறேன்

—ஒரு நன்மை விரும்பி

# எம்ப்ளாய்மெண்ட் நியூஸ்



பிரதி தோறும் வாங்கிச்
சலித்த
அப்பாவி பட்டதாரி
எழுதிக் கேட்டான்
ஆயுள் சந்தா எவ்வளவு?

**கே. வி. குப்பம் பாஸ்கரன்**




இல்லாத நிலத்துக்கு
கொடுக்கப்படும்
பட்டா.

**ச. கணபதி வெங்கட்ராமன்**




வறுமைச்
சகாராக்களைத்
தாண்ட
கையில் வைத்திருக்கும்
காகித ஒட்டகங்கள்.

**த. ராஜசேகரன்**

## படித்தும் தமிழகத்தில் வேலை இல்லாதோர் பட்டியல்

1) எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.காம்., பட்டதாரிகள் 11,527
2) பி.ஏ.,பி.எஸ்ஸி., பி.காம்., பட்டதாரிகள் 1,03,000
3) பி.யு.சி. & மேல் நிலை தேறியவர்கள் 87,000
4) எஸ்.எஸ்.எல்.சி; மெட்ரிக்குலேஷன் 2,91,000
5) எட்டாம் வகுப்பு மேல் எஸ்.எஸ்.எல்.சி. வரை 2,46,000
6) ஐ.டி.ஐ. பயிற்சி பெற்றோர் 33,000
7) செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றோர் 15,075
8) மொழித்துறைப் புலவர்கள் 3,585

இது 1981 ஜனவரி நிலவரம் ஆகும்.

—நன்றி: அரசி



FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

*பஸ், ரயில்வே ஸ்டேஷன், எலக்ட்ரிக் பில் கட்டும் இடம், இன்னும் அரசாங்கச் சம்பந்தப்பட்ட அத்தனை இடங்களிலும் எப்பொழுதும் சில்லறைப் பஞ்சம் இருந்துகொண்டே இருக்கிறது.*

*இதுபோன்ற இடங்களில் கண் தெரிந்துசுமார் ¾ மணி நேரம் நாம் கியூவில் நகர்ந்து கொண்டிருக்கிறோம். நமக்கு முன் ஒரு இருபது, முப்பது பேர் போயிருக்கிறார்கள். நாம் பார்க்க அவர்கள் அத்தனை பேரிடமும் சில்லறை சரியாகக் கொடுக்கும்படி கேட்டு வாங்கிக்கொண்டிருக்கிறார் 'கவுண்'டரில் உள்ளவர். நாம் ரூ. 1-90 கொடுப்பதற்காக இரண்டு ரூபாய் நோட்டை நீட்டுகிறோம். அவர் கொடுக்க வேண்டியது மீதம் 10 காசு. ஆனால் அவர் மிகக் காட்டமாக ''சில்லறையாகக் கொடு'' என்று உறுமுகிறார்.*

# சில்லறை விஷயம்

*கடந்த ¾ மணி நேரமாக நாம் பார்க்க சுமார் 20, 30 பேரிடம் வாங்கின சில்லறை எல்லாம் என்ன ஆயிற்று? அவர் 10 காசு சில்லறை தர இயலாதாம். நாம் 90 காசு சில்லறை தரவேண்டுமாம். அழுவதா? சிரிப்பதா?*

*இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் தட்டிக் கேட்காமல் மக்கள் மௌனியாக இருப்பதும் மக்கள் குற்றமே.*

*சினிமா கொட்டகை, ஹோட்டல், கடைகள் போன்ற அநேக தனியார் நிறுவனங்களில் எப்பொழுதும் வேண்டிய சில்லறை வைத்திருந்து கொடுக்கிறார்கள். ஆனால் சில்லறை இல்லை என்பதற்காக ஏறின பஸ்ஸிலிருந்து இறக்கிவிடப்படும் பரிதாபமான பொது ஜனத்தை அன்றாடம் பார்க்கிறோம்.*

*இந்த 'சில்லறை விஷய'த்துக்குக் கூடவா ஒரு வழி வகுக்க நம் அரசாங்கங்களுக்குத் துப்பு கெட்டுப் போய் விட்டது.!*

—சுயராஜ்





# துணை நடிகைகள்

புதுமுகமாக அறிமுகமாகும் நடிகைகள், திறமையும் சந்தர்ப்பமும் துணை செய்தால் முன்னணிக்கு வந்து விடுகின்றனர்.

ஆனால் 'எக்ஸ்ட்ராக்கள்' என அழைக்கப்படும் துணை நடிகையர் என்றும் முன்னணிக்கு வரமுடியாமல், சீரழிந்த நிலையிலேயே தங்கள் வாழ்நாளை ஓட்ட வேண்டியிருக்கிறது.

இவர்களுக்கு என்று ஒரு சங்கமுண்டு. அதுவே இவர்களை A, B, C, என்று அழகின் அடிப்படையில் பிரித்து முத்திரை குத்தி விடுகிறது. படத்தின் காட்சிக்கேற்ப தயாரிப்பாளர், ஏஜென்டிடம் சொல்லியனுப்பினால், ஆடு மாடுகளைப்போல இவர்கள் வந்தாக வேண்டும்.

ஒரு நாள் கால்ஷீட்டிற்கு Aக்கு ரூ 100, Bக்கு ரூ 75, Cக்கு ரூ 50 வீதம் சம்பளம். இதுவும் முழுவதுமாக வருவதில்லை. ஏஜென்ட் இந்தப் பணத்தில், தான் எடுத்துக்கொண்டது போக மீதியே இவர்களுக்கு வந்து சேரும்.

காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை இவர்கள் இருந்தாக வேண்டும். லைட் பாயிலிருந்து, தயாரிப்பாளர் வரை இவர்களை வேலைக்காரியை விடக் கேவலமாகவே நடத்துகின்றனர். நடுவில் ஏஜென்ட்டுக்குத் தெரியாமல் எங்கும் நகரக் கூடாது. நகர்ந்தால் வாய்க்கு வந்தபடி கேவலமாகத் திட்டுவார்கள்.

ஒரு கற்பழிப்புக் காட்சியோ, ஆபாசக் காட்சியோ இடம் பெறும் போது, இழுத்த இழுப்புக்கெல்லாம் கதாநாயகி நடிகை வரமாட்டாள் என்பதால் இந்தத் துணை நடிகையரைத் தூரத்தில் காட்டி, எல்லா விதத்திலும் அவர்களை அசிங்கப்படுத்தி படம் எடுப்பார்கள். முகம் மட்டும் படத்தில் கதாநாயகி. உடம்பு துணை நடிகையதாக இருக்கும்.

இது போன்ற படு அருவருப்பான காட்சிகளில் நடிக்க கொஞ்சம் முகம் சுளித்தாலும், அந்தத் துணை நடிகை உடனே தூக்கி எறியப்பட்டு மற்ற ஒருத்தி வரவழைக்கப்படுவாள்.

தலைமுறை தலைமுறையாக வேறு வழியின்றி இவர்கள் இந்த நரக வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். ஒரு வீட்டில் தாய் துணை நடிகை. பின்னர் சங்கத்தில் மகள், தங்கை சேர்க்கப்படுகின்றனர். வயிற்றுப் பிழைப்புக்கு இதுவும் போதவில்லை. படப்பிடிப்பில் மாலை 6 மணிக்குமேல் ஒட்டப் பிழிந்து அனுப்புகிறார்கள். அதன் பிறகும் தன் குடும்பத்தில் இன்னும் சிலரும் சில வேளைகள் சாப்பிட, யாராவது சிலரின் படுக்கை அறையில் தன்னை விற்றாக வேண்டிய வலுக்கட்டாய நிலை.

இவர்களின் சங்கத் தலைவர்கள் இந்த நடிகைகளுக்குக் கொஞ்சம் அதிகமான பணத்தை வாங்கிக் கொடுத்து இவர்கள் இப்படி முறை கேடாகச் செல்லாமல் ஏதுவும் வழி வகை செய்வதாகத் தெரியவில்லை. மாறாக இவர்களை வைத்து மேலும் பணம் பண்ணவே யோசிக்கிறார்கள்.

பெண் உரிமை இயக்கங்கள் இவர்களுக்காகவும், விடுதலைப் போரில் இறங்கியாக வேண்டும்.

—[illegible]



FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

*மசாலா பத்திரிகைகள் :*

# சாவி

சாவியைப்பற்றிய விமர்சனமும், சா. விஸ்வநாதனைப் பற்றிய விமர்சனமும் ஒன்றே. ஏனெனில் சாவி – சா.வி=0.இதுவே வேறல்லா பத்திரிகையையும் விட இதன் தனித்தன்மை.

ஜனநாயக செயலமைப்பும், குழு சிந்தனையும் உலகமெங்கும் பரவி வரும் நேரத்தில் நமது தமிழகக் கிணற்றுக்குள் சர்வாதிகார அரசாட்சியைச் செய்து வரும் சில தனி நபர் பத்திரிகையாளருள் சாவி தலையானவர். கப்பல் மாலுமியே கப்பலுக்குத் தன் பெயரை வைத்துக்கொள்வது போன்ற குழந்தைத்தனம்!

அவர் குழந்தைகள் எதிர்காலத்தில் வசதியாக இருப்பதற்காக செய்துவரும் தொழில் 'சாவி'. இது நம் கணிப்பு அல்ல. அவரது பிரகடனம்: ('எனக்கு ஒரு திறமை இருக்கும் போது, எனக்கு இருக்கும் இரண்டு பிள்ளைகளுக்குப் பணம் சேர்த்து வைக்காவிட்டாலும் ஒரு தொழிலை ஆரம்பித்து வைக்கலாம் அல்லவா?... அதனாலே சொந்தப் பத்திரிகை ஆரம்பித்தேன்')

அவர் வீட்டில் பணம் சேர்க்க நம் வீட்டுப் பெட்டிக்குச் சாவி போடுகிறாரா? இளைஞர்களை வைத்து உலகத்தையே புரட்டுவதாகச் சொல்வதும், புதுமைக்கு மொத்த விற்பனையாளராகக்காட்டிக் கொள்வதும் இவரது வியாபாரத்தின் ஓர் அம்சமே என்பதைக் குக்கிராமத்தில் இருக்கும் இன்னும் சில வெள்ளைமன வாசகர்களும் புரிந்து கொண்டால் சரி!

பாலகுமாரன் வகையறாக்களோ, லட்சுமியோ, சுஜாதாவோ ஜெயராஜோ இந்த அணியில் முக்கியமில்லை, நிலையானவர்களுமில்லை ('சுஜாதா' இதழ் கௌரவ ஆசிரியர்கள் கதிபோல) இன்னும் சொல்லப் போனால், கடைசிநிலை பியூனிலிருந்து. எழுத்தாளர் சுஜாதா வரை இவரது கோபாக்கினிக்கு இலக்காகி, இவருக்குக் 'காய் விட்டு' போயிருக்கிறார்கள். அனந்து, மாலன் மட்டுமே வெளியில் தெரிந்தாலும், தமிழக எழுத்தாளர்களில் இவர் சண்டை போடாத, எரிச்சல் மூட்டாத நபர்கள் மிகவும் குறைவு. வள்ளுவரின் 'இனியவை கூறல்' படித்தால் இவருக்காகவே எழுதப் பட்டது போல இருக்கும்.

இவரது வயதை முன்னிட்டோ, சுயநல காரணங்களுக்காகவோ, அல்லது இவரே கெஞ்சியதன் பேரிலோ, சிலர் இவரிடம் திரும்பியிருக்கிறார்கள். அப்படி உள்ளே இருப்பவர்களும் கூட இவருடன் 'குளிர்ப்போரில் தான் இருக்கிறார்கள்.

சமுதாய பிரச்சனைகளுடன் சண்டைபோட வேண்டிய பத்திரிகையாளருக்குக் கடும் அவசியம் இருக்கையில், இப்படித் தனி நபர்களுடன் சில்லறைத்தனமாகச் சண்டை போட்டுக்கொண்டு வீணாகிக் கொண்டிருக்கிறார் சாவி.

நகைச் சுவை எழுத்தாளர் என்ற பெயருடன் இவர் நினைத்துப்பார்க்கப்படுவது மேற்படி பண்புகளுடன் ஒரு வேடிக்கையான முரண்பாடே. இன்னும் சொல்லப் போனால், அந்தப் பெயர் கூட 'வாஷிங்டனில் திருமணம்' ஒன்றைப் பற்றியே வாழ்கிறது. அதற்குப் பிறகு வேறெந்த படைப்பும் அவர் பெயர் சொல்லும்படி நிலைக்கவில்லை.

இங்கிலையில் சக எழுத்தாளர் மணியனை விமர்சித்திருப்பது வெகு நாள் பின் சாவி அடிக்கும் ஜோக்காகும்: "மணியனை இன்னமும் நான் ஓர் எழுத்தாளராக நினைக்கலே. அவர் நடத்தர பத்திரிகையை ஒரு பத்திரிகையாகவே நான் கருதலே".



தனது எழுத்து நீர்த்துப் போய் விட்டது என்பதால், தனது பத்திரிகையை நிற்க வைப்பதற்கு மீண்டும் மீண்டும் பிரபல எழுத்தாளர்களிடம் தான் அவர் சமாதானம் செய்து கொண்டு சரணடைய வேண்டியிருக்கிறது. பிரபலமானவர்கள் சரிப்பட்டு வராத போது புதுமை செய்வதாகக் காட்டி உண்மையில் திறமையுள்ள இளைஞர்களை இழுத்துப் போட்டுக் கொள்கிறார்.

பத்திரிகைத் துறையைவிட. அரசியலில் புகுந்திருந்தால் அவர் இன்னமும் சிறப்பாக இருந்திருக்கக் கூடும். நம் அரசியல் வாதிகளுக்குரிய பச்சோந்தித்தனம், விசுவாசமின்மை, ஆசை காட்டி மோசம் செய்தல், போன்ற சிறப்புத் தன்மைகள் நிறைய இவரிடமுண்டு. இவரது 'தோட்டத்திலிருந்து கோட்டைவரை' படித்து விட்டு இந்தத் திடீர் பாய்ச்சலால் திக்கு முக்காடிப் போன வாசகர்கள் எத்தனை பேர்!

1936லிருந்து பத்திரிகைத் துறையிலிருந்து நாடோடி, (தொடக்கப் பெயரே இப்படி-அந்த ஓட்டம் நிற்குமா?), வெள்ளி மணி, இந்தியன், வாடாமலர் இவற்றை நடத்தி, தினமணியில் துணையாசிரியராகி, தாராசிங் கிங்காங் குஸ்தி சண்டை விளம்பர பொறுப்பாளராகி, விகடன். கதிர், குங்குமம் என்ற அனுபவங்கள் எல்லாம் இருந்தும், அனுபவங்கள் அவருக்குச் சொல்லித்தரும் பாடம் 'எப்படி வெற்றிகரமாக ஒரு மசாலா பத்திரிகை நடத்துவது' என்பதை மட்டுந்தானா?

"...இதையெல்லாம் விட்டுட்டு ஒண்ணுமே இல்லாம புதுசா ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கச் சொன்னா எடுத்த எடுப்பிலேயே ஒரு லட்சம் பிரதி விற்பனையாகும் படி செய்ய என்னால் முடியும். அதற்கான திறமை என்னிடம் இருக்கு" என EGOவுடன் கூறுகிறார் வணிகர், சாவி.

நாம் விமர்சித்து வரும் மற்ற மசாலா, பத்திரிகை முதலாளிகளுக்குச் சளைக்காமல், இவரும், மிகக் குறைந்த சம்பளம், படைப்புக்களுக்குத் தொகை வழங்காமல் மோசடி செய்தல் இவற்றை இயன்றவரை செய்வதாக செய்தி வருகிறது. சாவி 1950இல் ரூ. 125 சம்பளத்துடன் 'கதிரில்' வேலை செய்தபோது ரூ. 25 அதிகமாகக் கேட்டுக் கிடைக்காமல் வெளியேறிய நாட்களைத் திரும்பிப்பார்ப்பதாகத் தெரியவில்லை.

தொடர்ச்சி - பக்கம் 24

FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

# சோப்பு SOAP சோப்பு SOAP

நமது அன்றாடத் தேவைகளில ஒன்றான சோப்பு 2,300 ஆண்டுகளுக்கு முற்பட்டது. முதல் சோப்பு கி. மு. 600லேயே தயாரானது. கி. மு. 2-ம் நூற்றாண்டு வரையில் மருந்து போலவே சோப்பு பயன்படுத்தப் பட்டது. 1549ல் அரசிக்கு ஒருவர் ஒரு பெட்டி நிறைய சோப்பைப் பரிசளித்தது உலகெங்கும் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது ஏனெனில் அப்போது சோப்பு அவ்வளவு விலை உயர்ந்தது! 8-ம் நூற்றாண்டு அரபு இலக்கியங்கள் சோப்பைத் தூய்மைப்படுத்தும் சாதனமாகக் குறிப்பிடுகின்றன.

ஆங்கிலேயர்கள் சோப்பு தயாரிக்க ஆரம்பித்தது 12ம் நூற்றாண்டில்தான். 1853ம் ஆண்டு தான் பிரிட்டிஷ் அரசு வரிக்கொடுமையிலிருந்து சோப்புத் தயாரிப்பாளர்களுக்கு விடுதலை அளித்தது இதனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் 10லட்சம் பவுன். இதன்பிறகே சோப்பு பொது மக்களால் சீரளமாகப் பயன்படுத்தப்பட்டது.

இன்று நாம் வாங்கும் சோப்பைத் தயாரிக்க ஆகும் செலவு விற்பனை விலையில் 25% தான். மீதி 75%. விளம்பரம், பாக்கிங் இவற்றிற்கான செலவினங்களே. ஆனால் இவையாவும் நுகர்வோரின் மேலேயே சுமத்தப்படுகின்றன.

இன்று இரும்பு உற்பத்தியில் தன்னிகரற்று விளங்கும் டாடா கம்பெனியாருக்குச் சொந்தமான ஹிந்துஸ்தான் லிவர் தான் பெரும்பான்மையாக சோப்பு உற்பத்தி செய்கிறது. சோப்பில் புதிய ரகங்களை இவர்கள் தோற்றுவிப்பது மக்களுக்குப் பயனளிக்கவல்ல. விலை குறைந்த லைப்பாய் சோப்பை வாங்கினாலும், விலையுயர்ந்த லாவண்டர் டியூ சோப்பை வாங்கினாலும் கிடைக்கும் பயன் ஒன்று தான்.

ஒரு சோப்பின் விற்பனை குறைய ஆரம்பித்தவுடன் புதிய நிறம், மணம் இவற்றுடன் கவர்ச்சிகரமான காகிதங்களில் சுற்றப்பட்ட புதிய சோப்புகளை இந்நிறுவனம் வெளியிடுகிறது. இதற்கான விளம்பரங்களுக்குச் செலவிடப்படும் கோடிக்கான பணம் ஏமாளிகளான மக்கள் மீதே சுமத்தப்படுகின்றது. செயற்கை மணத்தையும், நுரைவளத்தையும் இயற்கையென மக்களை நம்பவைத்து கூலியையும் மக்களையே கொடுக்க வைக்கும் இவர்களது சாமர்த்தியம் கொடூரமானது. நுரைவளத்திற்கும், சுத்தம் செய்வதற்கும் சம்மந்தமில்லை.

சலவைத்தூளிலும் இதே கதி தான். ஒரு சலவைத்தூளின் மார்க்கெட் சரிந்தால் பிளாஸ்டிக் பொருட்கள் தூக்கி நிறுத்துகின்றன. இம்முறையில் சலவைத்தூளின் விலை ஏற்றம் காண்கிறது மேலும் இதே நிறுவனம் தயாரிக்கும் ஏனைய விற்பனையாகாத பொருட்களுக்கு விடிவு பிறக்கிறதே யொழிய நமக்கு எம்முறையிலும் லாபமில்லை. மக்களது அறியாமையும், விளம்பர மயக்கமுமே சோப்பு வியாபாரிகளைக் கோடீஸ்வரர்களாக்குகின்றன

—நிலா

# AIR-INDIA
# ஏர் இந்தியாவில் ஓர் அமைச்சர் மகன்

முன்பு மொரார்ஜி மகன் காந்தி தேசாய், ஜெகஜீவன் ராமின் மகன் சுரேஷ்ராம் இவர்கள் தங்கள் தந்தையாரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆடிய ஆட்டங்கள், பெற்ற சலுகைகள் நாடறியும்.

பிரதமரின் மகன்கள் மட்டும் தான் தனிச் சலுகை பெறுகிறார்கள் என பலரும் நினைப்பது தவறு. கீழ் மட்டங்களில் சத்தம் வெளி வராமல் அது அது நடந்து கொண்டு தான் இருக்கிறது.

மத்திய சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சரான திரு. ஏ. பி. சர்மாவின் மகன் திடீர் பாய்ச்சலில் ஏர்-இந்தியாவின் நிலைய மேற்பார்வை அதிகாரியாக உயர்த்தப்பட்ட கதை இப்போது வெளி வந்திருக்கிறது.

அமைச்சரின் மகன், மன்மோகன் சர்மா. வயது 30. பதவி உயர்வு வரிசையில் 112-வது இடத்தில் இருந்தார். கடைசி மூன்று ஆண்டு வேலை நிலைமைகள் பதவி உயர்வுக்கு முன்னால் கணிக்கப்படும். ஆனால் மன்மோகனுக்கு 1978-79 இல் மிக மோசனமான குறிப்புகள் உள்ளன.

மன்மோகனின் இறந்த கால வேலை வரலாறு இது தான். புதுடில்லிக்கு 3 ஆண்டுகளுக்கு முன்னர் தான் மாற்றப்பட்டார். இதற்கு முன் இவர் லண்டனிலும், பிராங்பர்டிலும் போக்குவரத்து துணை அதிகாரி. பின்னர் கம்யூனிட்டி டெவலப்மெண்ட் ஆபீசர் என்று இவருக்காகவே ஒரு பதவி அமைத்துத் தரப்பட்டது. உடனே லண்டன் ஆபீசர்கள் எதிர்ப்புக்குரல் கொடுத்தார்கள். வேறு வழியின்றி இப்பதவி எடுக்கப்பட்டது.

உடன் அமைச்சருக்கு வேண்டியவர்கள், அவர் மகனைக் காப்பாற்ற **BHEL** லண்டனில் ஒரு தொடர்பு அதிகாரியாக இவரை அமர்த்தினர். ஆனால் இவரோ லண்டனில் வசதியோடு வாழ, அந்தப் பதவி சௌகரியமாகஇல்லையென, அந்தப் பதவியை விட்டும் விலகி விட்டார்.

தந்தையார் 1980 இல் மத்திய அமைச்சரானார். மன்மோகனை செயற்கையாக உயர்த்த ஏர் இந்தியா தலைவர் ரகுல்ராஜ் மேல் அழுத்தம் கொண்டு வந்தார்கள். அவர் மசியவில்லை.

தந்திரமாக மேலாளர் திருமதிசெல்லாராம் கையில் விஷயத்தை மாற்றினார். அந்த அம்மையாரோ, இந்த அநியாய பதவி உயர்வுக்குத் துணை போவதானால், தன் பதவியை விட்டே விலகத் தயாரானார்.

இருப்பினும் எப்படியோ மர்மமாக மன்மோகனை உயர் பதவிக்கு ஏர்-இந்தியா தூக்கி நிறுத்தி விட்டது. அரசியல் செல்வாக்கு பாதாளம் வரை மட்டுமல்ல வானமண்டலங்களுக்கும் பாயுமே!

இவர் மனைவியும் புதுடில்லி ஏர் இந்தியா அலுவலகத்தில் தனது படிப்புக்கு மீறிய வேலையொன்றை வலிந்து கேட்டு வருகிறாராம்.

ஒரு புறம் ஏர்-இந்தியா ரூ. 1.5 கோடியைச் சிக்கனப் படுத்துவதாகக் கூறி 391 தொழிலாளருக்குச் சமீபத்தில் கல்தா கொடுத்திருக்கிறது.

*ஆதாரம்:—* **கரண்ட்**



FREE E-Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

# அன்புள்ள சபாநாயகர் திரு.க.ராசாராம் அவர்கட்கு,

வணக்கம். தென்னிந்தியப் பத்திரிகையாளரான மணியன் மாமாவின் தூண்டுதலால் இந்தக் கடிதம் எழுதுகிறேன். சேலம் மாவட்ட சிறப்பிதழ் 'இதயம் பேசுகிறது', 28.6.81 இதழில், உங்களைப் பற்றி வெளியிட்ட கட்டுரையின் கடைசியில் குறிப்பிட்டிருப்பது:—

**(உங்களுக்கு)-மிகவும் பிடித்த பத்திரிகைகளில் ஒன்று- 'மயன்' "அருமையான தொண்டு அது! வளரும் சமுதாயத்தை உருவாக்குகிறீர்கள்! லாபம் கருதாமல் அந்தப் பத்திரிகையை நன்றாக நடத்துங்கள்" என்று என்னிடம் (மணியனிடம்) கேட்டுக் கொண்டார் இராசாராம்.**

மயன் பத்திரிகை அட்டையில் தொடர்ந்து, சளைக்காமல் 'புதியதோர் உலகம் செய்வோம்' என அச்சடித்துத் தள்ளிக் கொண்டிருக்கிறார்களே! இதைப் பார்த்து வேதனைப்பட்டுத்தான் நீங்கள் இப்படி உங்களுக்கே உரிய நாசூக்கான முறையில் சொல்லியிருக்கிறீர்கள். மணியன் மாமாவிடம் விவகாரத்தை அறிவார்ந்த முறையில் தொட்டுக் காட்டியிருக்கிறீர்கள்.

"......கெட்ட, போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்" என்று வரும் பாரதிதாசனின் அந்தப் பாடல் வரிகள் சமூக மோசடிக்கு ஆனதல்ல என்பது உங்கள் உள் மனதை வாட்டியிருக்க வேண்டும். அதனால் தானே 'திருவிளக்கு' பத்திரிகையாசிரியரான நீங்கள் காளமேகம், 'காரென்று பேர் படைத்தாய்' எனப் பாடியது போல நாசூக்காக மணியன் மாமாவைச் சாடியிருக்கிறீர்கள்!

'இதயம் பேசுகிறது' பேட்டியில் மயன் பற்றிச் சொல்லி இதயம் பேசுகிறது பற்றிச் சொல்லாமல் ஒதுங்கியிருக்கிறீர்கள். இதன் மீது என்ன கசப்பு உங்களுக்கு?

மயனை விட இது எந்த அம்சத்தில் தரம் குறைந்தது? பெண்ணின் அம்மணப்படம் போட்டு பெயர் சூட்ட கேட்டிருந்தாரே இதயம், பேசுகிறது பத்திரிகையில். அதைப் பார்த்த வாசகர்கள் சிலர் மணியன் மாமா தன் குடும்பத்துப் பெண்ணை இப்படி துகிலுரித்திருக்க வேண்டாம் என வருத்தப் பட்டது போல நீங்களும் வேதனைப் பட்டிருப்பீர்களோ? ஓகோ அதனால் தான் இதயம் பேசுகிறது பற்றிச் சொல்லாமல் மயனைப் புகழ்ந்தீர்களோ!

சரியான சந்தர்ப்பத்தில் உங்கள் மனபாரத்தைப்பகிர்ந்து கொள்ளவே நானும் நண்பர்களும் விரும்புகிறோம்.

இது திறந்த மடலாயினும், நீங்கள் இதனை வெளிப்படையாக அங்கீகரிக்க முடியாததன் சிக்கல் புரியாமல் இல்லை.

அன்புடன்
—இரத்தினம்



# புகை பிடிப்பதை நிறுத்த வழி!

*புகையிலையின் தீமையைப் பற்றிப் புள்ளி விபரங்கள் கொடுத்து அது கெட்டது கெட்டது என்று உதட்டளவில் நிறுத்திவிடாமல் அதைச்செயலில் கடைப்பிடித்து, நிறுத்துவது எப்படி என்பதைச் சுட்டி தன் வாசகப் புகைஞர்களுக்குச் சொல்ல விரும்புகிறது.*

*1 முதல் கட்டமாக அதை நிறுத்த ஒரு முடிவு தேதி தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் அது உங்கள் பிறந்த நாளாகவோ அல்லது மனைவி மக்களின் பிறந்த நாளாகவோ இருக்கட்டும்.*

*2 பாக்கட்டாக வாங்குவதை நிறுத்தி ஒன்றிரண்டே வாங்குங்கள்.*

*3 காலை எழுந்தவுடன் தீப்பெட்டி தேடிப் பற்றவைப்பதை, குளித்த பிறகு ஆகட்டும் என்றோ, டிபன் சாப்பிட்ட பிறகு ஆகட்டும் என்றோ ஒத்திப் போட்டுக் கொண்டே (Postponing) வாருங்கள்.*

*4 சிகரெட் குடிக்காதவர்கள் உயர்ந்தவர்கள்; குடிப்பவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற மனப்பான்மையுடன் உங்களையே நோக்குங்கள். சிகரெட் குடிப்பவர்களைத் தாழ்வாக பாருங்கள்! சும்மா மனோதத்துவ ரீதியான பயிற்சிக்காகத்தான் இது. உள் மனதில் இவை நல்ல பலனைத் தரும்.*

*5 நீங்கள் ஒரு தந்தையானால் ஐயோ நம் மகனும் இதைக் கற்றுக்கொண்டுவிடுவானே என்றும், நீங்கள் ஓர் ஆசிரியன் ஆனால் ஐயகோ நம் மாணவர்கள் நம்மைப் பின்பற்றி வருவார்களே என்றும் சிந்தனை செய்து பாருங்கள்; அந்தப் பொறுப்புணர்ச்சியில் புகையில் மனம் போகாது.*

*அடுத்த மாதம் நாம் சந்திக்கும் வரையில் அவ்வப்போது ஒன்றிரண்டு புகைத்துச் சுகம் காணுங்கள், பிறகு பேசிக் கொள்வோம்.*

—சுட்டிபாரதி



FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

A Rare Opportunity For College Students and Professionals. Obtain All Your Requirments Of Books for B.A., B.Com., B.Sc., M.A., M.Com., M.Sc., A.C.S., I.C.W.A., C.A., B.E., A.M.I.E. & Competition Books Etc.,

**AT 10% DISCOUNTS**

From :

Phone : 426924


**MADRAS BOOK HOUSE,**

9, Hanuman Koil Street,
WEST MAMBALAM,
(Near Mambalam Rly. Station),
MADRAS-600 033.

**Distributors For**

Sultan Chand & Sons, New Delhi,
Khanna Publishers, ,,
Dhanpat Rai & Sons, ,,

# ஜெயகாந்தன்



தமிழ் எழுத்துலகம் தேச விடுதலைப் போரில் பங்கெடுத்து களைப்படைந்த நேரத்தில் படைப்புத் துறையில் கருமேகங்கள் சூழ்ந்தன. முன்னணி எழுத்தாளர்கள் காகிதங்களை வீணாக்கிக் கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் சப்தமில்லாமல் இலக்கியப் பத்திரிகைகளில் இவர் எழுதிய சிறுகதைகள் கல்வெட்டுக்களாய் கம்பீரத்துடன் நின்று பிரபல பத்திரிகையாளர்களை மின்னல் தாக்குதலுக்குள்ளாக்கின. 'ஆனந்த விகடன்' வாசன் கிரீடங்களைத் தூக்கிப் போட்டு அந்தப் படைப்பாளியின் வீட்டு வாசலில் தவம் இருந்தார். ஜெயகாந்தன் கண்டெடுக்கப்பட்டார்.

கம்பீரமான எழுத்துப் பொலிவு, தோற்றப் பொலிவு கொண்ட இவருடைய சிறுகதைகளின் தாக்கம், கட்டுமானம், வைரம் பாய்ந்த வார்த்தைகள், இதுவரை வேறு எந்தப் படைப்பாளிக்கும் வாய்க்கவில்லை. யதார்த்த இலக்கியத்தில் புதுமைப் பித்தன் விட்ட இடத்தைப் பூர்த்தி செய்து செழுமைப்படுத்தினார்.

ஆனால் ஜெயகாந்தன், ஒன்றிரண்டு தொடர்கதைகள் தவிர மற்றெல்லாவற்றிலும் வீழ்ச்சியே கண்டார். வித்யா கர்வம் தலைக்கேறி ஞானகுருவாகி, தன் படைப்புகளால் ஈர்க்கப்பட்ட வாசகர்களுக்கு நாவல் என்ற பெயரில் தத்துவப் பிரச்சாரம் செய்து 'இந்துத்துவ' அரசியல் வாதியான நாள் தொட்டு இந்நாள் வரை எழவே இல்லை.

சிறுகதைகள் படைத்த தோழர் ஜெயகாந்தன் 'சில நேரங்களில் சில மனிதர்க'ளில் மிஸ்டர் ஜெயகாந்தனாக அந்நியப்பட்டு, 'கங்கை எங்கே போகிறாள்'ல் ஸ்ரீலஸ்ரீயானார். அந்த கங்கா எந்த விஷயத்தை நவீனமாக்கிப் பவித்திரப்படுத்துகிறது?. ஒரு பெண் ரௌடித்தனமாய் கெடுக்கப்பட்டாலும், அப்பெண் கெடுத்தவனையே மானசீகக் கணவனாக ஏற்றுக் கொண்டு பத்தினியாக வேண்டும் என்ற பிராமணத்தனத்தை அல்லது ஆண் ஆதிக்கக் கொள்கையைத் தானே?.

ஸ்ரீலஸ்ரீ ஜெயகாந்தன் ஜெய ஜெய சங்கரரில் மிருக பவ்யத்-

FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

துடன் சங்கராரகி மத போதகராகிருர். தற்போது எல்லாம் போய் படைப்பு என்று சொல்லத்தக்க எதையும் செய்யாமல் திரு. ஜெயகாந்தராகி யந்திரகதியாக நாவல்கள் விற்று அழுகிப் போய் ஒரு கையில் காங்கிரஸ் கொடியும், மறுகையில் தி.மு.க. கொடியும் ஏந்தி, ஆத்மாவில் துயரங்களை வெற்று ஆரவாரமான வார்த்தைகளால் மறைத்து அவலமாகிப் போகிருர். நாம் நாளாக நாளாக படைப்பாளிகள் ஆழப்படுவதைத் தான் பார்த்திருக்கிருேம். ஆனால் ஜெயகாந்தனே இவ்விஷயத்திலும் பின்னேக்கிப் போகும் கொள்கையையே ஆதரிக்கிருர் போலும், இது நமக்கெல்லாம் ஒரு ஹிம்சையே. ஏனென்ருல் வேறு எவரையும் விட புதிய படைப்பாளிகளுக்கு முன்னேடியாக இருந்த ஜெயகாந்தன் இப்போது எச்சரிக்கையாக அல்லவா காட்சியளிக்கிருர்!

—நானக்

## சாவி தொடர்ச்சி

'அட்டையில் பெண்ணினத்தை அழகு காட்டி விற்கும் தேர்ச்சியும் 2 பக்கத்துக்கு ஒரு முறை கவர்ச்சி திரைப்பட பிட் போடும் உத்தியும், உங்கள் பத்திரிகை விபச்சாரத்தின் ஓர் அம்சமாக இருக்க மக்கள் அதைத்தான் விரும்புகிருர்கள் என நம்மை குற்றவாளியாக்குவதும் 'பத்திரிகை நடத்துறவங்க ஒரு ஆசிரியராக இருக்க முடியாது' என ஒதுங்குவதும் சுத்த மோசடி வேலைகளே. உங்கள் நெடுநாள் அனுபவமும் திறமையும், மக்களைத் தீமூட்டி நீங்களெல்லாம் குளிர் காயத்தான் பயன்பட வேண்டுமா?

உங்கள் இதயத்தைத் திறக்க சாவியே இல்லையா?

வார்னிஷ் தாளும், வெப் ஆப்செட்டும், மயக்க மருந்து தரப்பட்ட வாசகர்களும், ஒட்டிக்கொண்டிருக்கும் புகழ் போதை எழுத்துக் கூலிகளும் இன்னும் எத்தனை நாட்களுக்கு உங்களோடு!

புதிய வாசகர் அலை புறப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது பிரளயமாகும்போது, உங்கள் கவர்ச்சிக் கோட்டைகளைத் தகர்த்தெறிய எந்த சாவியும் வேண்டாம்'.

(அடுதது குங்குமம்)

—எழில்

□ ஒவ்வொரு மாதமும் **15ஆம் தேதி** சுட்டி வெளிவரும்.

□ 12 இதழ்கள் அஞ்சலில் பெற ஆண்டு சந்தா ரூ. 3-00 பணவிடை செய்யலாம்.

□ எல்லாத் தொடாபுகளுக்கும்:-

**ஆசிரியர் குழு, 'சுட்டி', 17, கஜபதி தெரு, சென்னை-600 030.**

FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010



# குடிசை மாற்று வாரியத்தில்...

குடிசை மாற்று வாரியம் நகரத்தின் சேரிகளை ஒழித்து சோஷலிச பூமியாக்கி விட்டது போல ஒரு ஸ்டன்ட் அடித்தது.

செங்கல்லால் ஆன கான்க்கிரீட் சேரியே தற்போது குடிசை மாற்று வாரிய வீடுகள்! அதே சூழல்! சாக்கடை நதிகள் திசை மாற்றிக் கொண்டு படிகளுக்குப் பக்கத்தில்!

இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனும் அடிப்படைத் தேவைகளிலிருந்து சரிசமமாக கவனிக்கப்பட்டாலொழிய, குடிசைகளும், அதில் உள்ள மக்களும் மாறப் போவதில்லை.

நடைமுறையில் நடப்பதையும் பார்ப்போமே! இங்குக் குடியிருப்போர்க்கு வாடகை மாதம் ரூ. 17 மின்சாரம் அறவே இல்லை. தனியாக ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். தண்ணீர் ஒரு நாளைக்கு அரைமணி நேரம்தான் குழாயில் வருகிறது.

குடிசை மாற்று வாரிய வீடுகள் வெளியாருக்கும் ரூ. 40 வரை வாடகைக்குக் கிடைக்கின்றன. கீழ் மாடியானல் ரூ 4000/- மேலானல் ரூ 3500/- பகடி தந்தால் போதும், இருந்து கொள்ளலாம். யாரும் வந்து பரிசோதிப்பதில்லை. வீடு கிடைக்கா நடுத்தர வர்க்கத்தினர் பலரும் இப்படிக் குடியிருக்கின்றனர்.

கடந்த 5 ஆண்டாக குடியிருக்கும் ஒரு பால்காரர் சொல்கிருர்:

"4வது மாடியில் இருக்கிறேன். தொட்டதற்கெல்லாம் கீழே ஓடி வரவேண்டும். தண்ணீர் பிடிப்பது தினமும் மாபெரும் போராட்டம். மழைக்காலத்தில் சமைக்க முடியாது. தண்ணீர் புகைபோக்கி வழியாக உள்ளே கொட்டும். கதவுகளை அழுத்தி சாத்தினல் தனியாக வந்து விடும். சுவர்கள் மிகவும் பலவீனமானவை. மொத்தத்தில் ஒரு மோசமான கட்டிட அமைப்பிற்கு இது உதாரணம். எந்தத் தனிமையும் இல்லை. குடிசையில் இருந்தபோது இருந்த இட வசதியும், தனிமையும், சுதந்திரமும் இந்த ஒட்டை கட்டிடத்தில் முழுவதும் பறிகொடுத்து விட்டோம்".

—ஸ்டெனிஸ்லாஸ்

இருளுக்குள் விருந்து
மாணவர் இதழ்
8, வேலன் தெரு,
T. R. பட்டினம்
காரைக்கால்-609 602

தூரிகை
இலக்கியத்திங்கள் இதழ்
அத்திக்கோம்பை அஞ்சல்
ஒட்டன்சத்திரம்-624 619
விலை 50 காசுகள்
ஆண்டு சந்தா ரூ. 6-00

சமரசம்
இஸ்லாமிய மாதமிருமுறை இதழ்
4, தாகியுத்தீன் கான் தெரு,
சென்னை-600 005.
தனி இதழ் ரூ. 1-00
ஆண்டு சந்தா ரூ. 22-00

அரசி
மாத மிருமுறை இதழ்
69, T. H. ரோடு
புதுவண்ணை,
சென்னை-600 081
ஆண்டு சந்தா ரூ. 6-00
தனி இதழ் 30 காசு

வெளுப்பு
சலவையாளர் சமூக இதழ்
200, M T H. ரோடு
பாடி, சென்னை-600 050
ஆண்டு சந்தா ரூ. 5-00
தனி இதழ் 30 காசு



★ இப்பகுதியில் இடம்பெற 2 பிரதிகள் அனுப்புக. தக்கவை தனியே விமர்சிக்கப்படும்.

## எமக்கு வந்தவை

சினிமா நடிகைகளின் கிசு கிசு
(நடிகையர் பற்றிய மோகத்தைக் கண்டித்து எழுதப்பட்ட விவரமான நூல்)
ஆசிரியர்: சுமங்கலா
விலை ரூ. 1-00
பூங்காற்று வெளியீடு
203, சாந்தி நகர்
சென்னை-6000 44

மக்களைக் கவர்ந்த மாபெரும் தலைவர்
(மு: கருணாநிதி பற்றிய சாதனை நூல்)
ஆசிரியர்: கவிஞர் மலர் தாசன்
மலர் பதிப்பகம்
பூந்தோட்டம், பூதாமூர்
விருத்தாசலம்-606 001
விலை 75 காசு

புரட்சி வேந்தன்
வார இதழ்
37, பிள்ளையார் கோயில் தெரு
சென்னை-600 040
ஆண்டு சந்தா ரூ. 16-00
தனி இதழ் 30 காசு

# பால் வள நிறுவனத்தில் பாவங்கள்

சென்னை நகரில் பால்வள நிறுவனம் வழங்கும் ஆவின் பாலில் ஊசி குத்தி, ஸ்டார்ச் கலப்பது பற்றி ஏற்கனவே சில புகார்கள் வந்ததை நாம் அறிவோம். இது போதாதென்று பால் வழங்குவதில் சில மட்டரகமான வேலைகள் அதிகரித்து வருகின்றன.

லாரிகளில் வந்திறங்கும் கிரேடர்களில் இருந்து பால் புட்டிகளை எடுத்துக் கொடுக்க நியமிக்கப் பட்ட ஊழியர்கள் முதலில் கார்டு இன்றி 'எக்ஸ்ட்ரா' பாலுக்காக காத்துக்கொண்டு இருக்கும் ஆட்களிடமிருந்து தலைக்கு ரூ. 1-50 முன்கூட்டி வசூலித்துக் கொள்கின்றனர். புட்டிகள் வந்திறங்கியதும் முதலில் கார்டு உள்ளவர்களுக்குத் தராமல் 'எக்ஸ்ட்ரா' பாலுக்காகக் காத்திருப்பவர்களுக்குத் தருகிறார்கள். பின்பே கார்டுக்குரியவர்களுக்கு! 'எக்ஸ்ட்ரா' தந்தால் தான் இங்கும் முதலிடம்.

சிலர் மாற்று பாட்டில்கள் தர முடியாததால் பாலைத் தனியாகப் பாத்திரத்தில் வாங்க நேரிடுகிறது. அவர்களுக்குப் புட்டியின் மூடியைப் பிரித்துபாலை ஊற்றும்போது முழுமையாக ஊற்றாமல் மீதம் பிடித்து, அப்படி பிடித்துச் சேர்த்த பாலையெல்லாம் ஒரு பாட்டிலில் ஊற்றி, அதை எக்ஸ்ட்ரா பால்காரர்களுக்கு விற்று விடுகின்றனர். யாராவது இந்த அநியாயத்தைக் கேட்டு விட்டால்போதும், உடன் மிக அசிங்கமான வார்த்தைகளை அள்ளி வீசி எரிந்து விழுகிறார்கள்; அவமானப்படுத்துகிறார்கள்.

குறிப்பிட்ட கால அளவு பால் விநியோகம் நடக்க வேண்டும். ஆனால் கொஞ்ச நேரம் தாமதமாக வருபவர்களைக் காலியான பால் புட்டிகள் தான் வரவேற்கும்.

இவை மாமூலாக பாமரமக்கள் நிறைந்த பகுதிகளில் தான் கேட்பாரின்றி நடைபெறுகின்றன.

பால்வள நிறுவன அதிகாரிகள் செயலிழந்திருக்கிறார்கள். அரசுக்கு இதைவிட முக்கியமான வேலைகள் இருக்கும்! நுகர்வோர் ஒன்றிணைந்து, அந்தந்த பகுதிகளில் அமைப்புகள் உருவாக்கி வலுவாக குரல் எழுப்புவதே இதற்கெல்லாம் விடிவாகும்.

—மல்லிகை



FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

சிறுகதை :

# நம்பிக்கை

ஒவ்வொருவராய் அவரைப்பார்க்க உள்ளே போனார்கள். வெகு நேரம் கழித்து அவன் முறை வந்தது. காலையில் சாப்பிடாமலேயே அவன் வந்திருந்ததால் களைத்துப் போயிருந்தான். கதவைத்திறந்து உள்ளே போனதும் ஏ.ஸி. குளிர் ஜில்லென்றது. அவர் அவனைப் பார்த்துப் புன்னகைத்தார். அந்தப் புன்னகை அந்த கணத்தில் அவனுக்கென்றே பிரத்தியேகமாக ஏற்பட்டது மாதிரி இருந்தது. அதனால் தான் எந்தக்கட்சியில் நின்றாலும் அந்தத் தொகுதியில் தொடர்ந்து ஜெயிக்க முடிகிறது.

'என்ன' என்பது மாதிரி நிமிர்ந்து பார்த்தார். கும்பிட்டான், காலில் விழப் போனவனைத் தடுத்தாட் கொண்டார். நிமிர்ந்தார். சுவரில் இடமே இல்லாமல் தேசத்தலைவர்கள் சிறைப்பட்டிருந்தார்கள். அப்பா சொன்னதை அப்படியே கிளிப்பிள்ளை மாதிரி ஒப்பித்தான்.

''உங்களுக்கு செய்யாம யாருக்குச் செய்யப் போறேன் அப்பாவை விசாரித்ததாகச் சொல்லு'' என்றார். அவன் படிப்பை, தேர்வு எண்ணை, இண்டர்வியு தேதியை, முகவரியை, குறித்துக் கொடுத்தான். அவர் வாங்கி பத்திரமாய் தன் கதர் சட்டைப் பையில் வைத்துக் கொண்டார்.

அவன் அந்த வேலை நிச்சயம் கிடைத்து விடுமென்று நம்பிக்கொண்டே வெளியேறினான்.

குளிப்பதற்காக சட்டை, வேஷ்டியைக் களைந்து எறிந்தார். வேலைக்காரி அழுக்காய் இருப்பதாய் அவற்றைப் பொறுக்கி சலவைக்காரனிடம் போட்டாள்.

ஆற்றில் துவைக்குமுன் சட்டைப்பையில் ஏதேனும் பிளேடு, ஊசி இருந்து கையைக் கிழித்து விடக் கூடாதே என்கிற எச்சரிக்கையில் அந்தச் சட்டைப் பையைத் துழாவினான். ஒரு காகிதம் நான்காய் மடித்து இருந்தது. பிரித்துப் பார்த்தான். மழைக்கு மட்டும் பள்ளியில் ஒதுங்கிய அவன் என்னவோ ஏதோ என்ற பயத்தில் அதை ஆற்றில் விட்டெறிந்தான்.

அவன் இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறான்.

—த. ராஜசேகரன்



நூல் விமர்சனம்

# பனிச்சாரலில் சந்திக்கிறோம்!

26 படைப்பாளிகளின் கவிதைகளை த. சலாவுத்தீன் தொகுத்திருக்கிறார். 'புதிய உலகம் செய்யப் புறப்பட்டிருக்கும் வானம்பாடிகளின் எழுச்சி கீதங்கள்' என இவற்றை அறிமுகப்படுத்துகிறார்.

'சிறகுப் பொசுங்கல்கள்' என எழுதும் ஈரோடு தமிழன்பன் தேர்தலைப் பற்றி தோலுரித்துக் காட்ட முயன்றிருக்கிறார்.

'ஐந்து ஆண்டுக்கொருதரம் ஜனநாயம் சாப்பிடும் தூக்க மாத்திரைகள்' இதுபோல சில வரிகள் சராசரி வாசகர்களுக்குப் புரியக்கூடும், ஆனால் கவிதையின் பின்பகுதிக்கு விளக்கவுரையின்றி புரிந்து கொள்ள முடியாது. 'இளைய சமுதாயமே எழுந்து வா...!' என எழுதும் த. சலாவுத்தீன் 'அரசியல் வாதிகள்... அருகில் கூடச் சென்று விடாதீர்கள்! அவர்களின், நிழல் கூட உங்களைச் சுட்டு விடும்!'— எனச் சொல்லி 'சுயக்கட்டுப்பாடு என்ற தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ளுங்கள்' என்றும் எச்சரிக்கிறார். சுட்டுவிடும் அரசியல் வாதியை செல்லாக்காசாக்க வழிகாணவேண்டும் என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும்! மூன்றே கால் பக்க கவிதை சலசலக்கின்றது. ஆனால் நீரோட்டமில்லை.

'அவள்...... என் காதலி' என எழுதும் எஸ். அறிவுமணி
'அவள் கண்ணில்
குபேர சுருக்கங்களுக்குச் சுருக்குபோடும்

என்று விடுதலைப் பெண்ணைக் காட்டியிருக்கிறார்.

மூன்றேகால் பக்கம் விவேகமாக எழுதிவிட்டு முடிவில்,

'நாற்று நடுகின்ற கிராமியக் கிளிகளுள் ஒருத்தியாய் கடைசியாய்
இருக்கின்றாளே

அவள் தான் என் காதலி'! என்று முடிக்கிறார்.

பாட்டாளிப் பெண்களைக் 'கிளிகள்' என உருவகப்படுத்தியுள்ளது கண்ணதாசன் வகையராக்கிகளின் பிரதிபிலிப்பிலிருந்து இவரும் முழு விடுதலை அடையவில்லை என வருத்தமூட்டுகிறது.

மொத்தத்தில் இந்தத் தொகுப்பின் முயற்சி வரவேற்புக்குரியது. ஆனால் படைப்புகளின் தரம் பனிச்சாரலில் கரைந்து போயிருக்கிறது என்பது தான் உண்மை.

—மானுடன்

(மலர்கள் இலக்கிய வட்டம், 15, 4வது பெருஞ்சாலை, சென்னை-600 061.)

FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

படித்திருக்கின்றீர்களா?
மெர்வின் எழுதிய நூல்களை!!

| | |
|---|---|
| முயற்சியே முன்னேற்றம் | 8 00 |
| நல்ல எண்ணம் நன்மையைத் தரும் | 5 00 |

நர்மதா பதிப்பகம்
1, வியாசராவ் தெரு, தி. நகர், சென்னை-17.

Phone : 20697
M. S. MANIAM & Co.,
Picture Calendars, Daily Calendars
All Party Flags Manufacturers
Dealers in : PAPER, BOARDS, STATIONERIES
1, Malayaperumal Street,
MADRAS-600 001.

வாசித்திருக்கிறீர்களா?
பி.எஸ்.ஆர். ராவ் எழுதிய நூல்களை!!

| | |
|---|---|
| மனதில் மறைந்திருக்கும் சக்தி | 6 50 |
| தாழ்வு மனப்பான்மை நீங்க மனஇயல் மருத்துவம் | 6 00 |

நர்மதா பதிப்பகம்
1, வியாசராவ் தெரு, தி. நகர், சென்னை-17.

GEETHA TOURIST
Govt. AUTHORISED TOURIST CAR OPERATORS
(DAY & NIGHT SERVICE)
RESIDENCE Phone : 497385
1, Pilliar Kovil Street, Pammal, Madras-600 075.
OFFICE Phone : C/o. 443564
39, South Usman Road, T. Nagar, Madras-600 017.

# பங்களூரில் பாராளுமன்றம்

செய்தித்தாளைப் படித்துவிட்டு எனது மாமா பலமாகச் சிரித்தார்.

"ஏன் மாமா! என்ன இப்படியொரு நகைச்சுவை செய்தித்தாளில் மதன் ஓவியம் ஏதாவது ....."

"இல்லையில்லை டில்லியிலிருந்து நமது பாராளுமன்றக் கூட்டத்தொடரை, பங்களூருக்கு மாற்றப் போகிறார்களாமே. செய்ய வேண்டிய எத்தனையோ காரியங்கள் பாக்கி இருக்க அநாவசியமான காரியங்களில் ஈடுபடுவதில் நமது அரசுக்கு இணையில்லை" என்று நமது அரசை இளக்காரமாய் பேசியது எனக்குக் கடும் கோபம் தந்தது. அவருக்கு விளக்கலானேன்.


"பங்களூர் பாராளுமன்றம் நடந்தால் அடிக்கடி அமைச்சர்கள் எம்.பி. க்கள் பலர் டில்லியிலிருந்து பங்களூருக்கு வர விடலாம். புதிதாக ஒரு லைன் போட திட்டம் வகுக்கலாம். அந்த திட்டத்து நடுவிலே பலபேர் புகுந்து பிழைக்க வழி தேடிக்கலாம். ரயில்வே லயன் போடுவதற்கு வேலையில்லாத பலரை உபயோகித்து அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு வழி செய்யலாம். புது ரூட்டிற்கு பிரதம மந்திரியின் பெயரைவைத்து முதலமைச்சர் திறக்கலாம்.

இதையெல்லாம் விட முக்கியமான அம்சம் ஒன்று இருக்கிறது. சும்மா சினிமா, டிராமான்னு பார்த்து அலுத்துப்போன பங்களூர்வாசிக்கு புது என்டர்டெயின்மென்ட் கிடைக்கும். பஸ்ஸில், பார்க்கில், ரோடில், ஆப்பீசிலே இப்படி எங்கு சென்றாலும் கொறிக்கறதுக்கு நிறைய அவல் கிடைக்கும். லெதர் இன்டஸ்ட்ரீஸ் ஆரம்பித்து நிறைய செருப்புகள் தயார்பண்ணலாம். அவை பாராளுமன்றம் களை கட்டபிக உதவியாயிருக்கும் இவ்வளவு விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு அதை விளம்பரப்படுத்திக் கொள்ளத் தெரியாத அரசைப் போய் குறை சொல்லிப் போய்விட்டீரே" என்று அவர் பதிலை எதிர்பார்த்துத் திரும்பினேன். அவர் அங்கு இருந்தால் தானே பதில் சொல்வதற்கு.

—சுவிசா சிசுபாலன்



FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010




FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010

கட்டு: மாத இதழ், 15, ஜூலை 81 Regd. No. TN/MS(N)/317
Licenced to post without prepayment Licence No: TN/MS(N)WPP-56

With best compliments

from :-

1857 / Dec 2010
http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்மணம்

# A Well Wisher

ஆசிரியர்: விச்வமா சுந்தர், வெளியிடுபவர்: பொ. இரத்தினம், 17, கறுப்பதி தெரு, சென்னை-30, அச்சிடுவோர்: J. S. பிரதர்ஸ்,
இருவர் பிரிண்டர்ஸ், 35, வப்பா தெரு, சென்னை-2

FREE E Books - www.thamizham.net - TM 1857 / Dec 2010